# தஞ்சாவூர் மாநகராட்சி

| Date of Meeting | Serial Number and subject in the Agenda ( MEETING) | Decision of the City Corporation |
|---|---|---|
| 30.11.2020 | 326. இம்மாநகராட்சியின் ஆணையாளர் அவர்களின் அக்டோபர்–2020ம் மாதத்திய நாட்குறிப்பு மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு :<br>பதிவு செய்யலாம். (ந.க.எண்.7826/2019/சி5) | பதிவு செய்யப்பட்டது |
| 30.11.2020 | 327. இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.27ல் அமையப்பெற்றுள்ள மாநகராட்சிக்கு சொந்தமான சர்வே வார்டு எண்.5, பிளாக் 8, சர்வே எண்.82 மற்றும் 455–ல் தற்போது குத்தகை இனத்தின் கீழ் உள்ள காவேரி லாட்ஜ் (மாசானிக் லாட்ஜ்) மற்றும் ஜூபிடர் திரையரங்கம் ஆகியவற்றின் தற்போதைய கட்டிடத்தின் மதிப்பை நிர்ணயம் செய்து வழங்கிட செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டிட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டம், தஞ்சாவூர் அவர்களுக்கு கடிதம் அனுப்பி கோரியதில், மேற்படி அலுவலக கடிதத்தில் அரசாணை எண்.181, பொதுப்பணித்துறை (G2) நாள் 16.02.2003-ன்படி மதிப்பீடு செய்யப்படும் கட்டிடத்தின் மதிப்பில் 1% நூற்று வீத கட்டணமாக அரசுக்கு செலுத்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீட்டு சான்று பொதுப்பணித்துறையிடமிருந்து பெறுவதற்கும், மேற்கண்ட துறையால் நிர்ணயம் செய்யப்படும் கட்டணத்தினை செலுத்துவதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று சம்மத கடிதம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டதை மாமன்றம் ஏற்கலாம்.<br>3) மேற்படி செலவினத்தை 2020–2021க்கான திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியில் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.6441/2011/எம்சிஏ5) | அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது |
| 30.11.2020 | 328. தஞ்சாவூர் மாநகராட்சியில் அரசாணை எண்.222 நிதித் (ஓய்வூதியம்) துறை நாள் 30.06.2018–ன்படி ஜூலை 2018 முதல் அரசு ஓய்வூதியதாரர்கள் (வாழ்க்கைத் துணை உட்பட) மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம் அமல்படுத்தப்பட்டு, ஓய்வூதியதாரர்கள் 100 நபர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் 22 நபர்களுக்கு முதலாமாண்டு தவணைத் தொகை ரூ.5,47,048/– நாள் 13.11.2019–ன்படி யுனைடெட் இந்தியா நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டு 13.11.2019 முதல் 12.11.2023 முடிய நான்கு ஆண்டுகளுக்கு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td></td><td></td><td>
முதலாமாண்டு காப்பீடு 12.11.2020—ல் முடிவடைகிறது. எனவே இரண்டாம் ஆண்டிற்கு ஓய்வூதியம் பெற்று வரும் 112 நபர்களில் 6 நபர்கள் (Spouse Covered) போக மீதமுள்ள 106 ஓய்வூதியதாரர்களுக்கும், குடும்ப ஓய்வூதியம் பெற்று வரும் 28 நபர்களில் 7 நபர்கள் (Employee) போக மீதமுள்ள 21 குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கும் கூடுதல் 127 நபர்களுக்கு ஒரு நபருக்கு ரூ.4484/— வீதம் ரூ.5,69,468/—ஐ செலுத்தப்பட வேண்டும். இந்த தொகையில் ரூ.4,200/— சம்பந்தப்பட்டவரிடமிருந்தும், கூடுதல் தொகை ரூ.284/— மாநகராட்சி நிதியிலிருந்தும் செலுத்தப்பட்டு வருகிறது.
<table>
<tr><td>முதலாம் ஆண்டிற்கு புதிதாக ஓய்வூதியம் அனுமதிக்கப்பட்ட ஓய்வூதியதாரர்கள் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய தொகை</td><td>ரூ. 60194</td></tr>
<tr><td>கூடுதலாக செலுத்தப்பட்ட தொகை (Spouse covered)</td><td>ரூ. 58292</td></tr>
<tr><td>மீதம் முதலாம் ஆண்டிற்கு கூடுதலாக செலுத்தப்பட வேண்டிய தொகை</td><td>ரூ. 1902</td></tr>
</table>
<table>
<tr><td>முதலாம் ஆண்டிற்கு கூடுதலாக செலுத்தப்பட வேண்டிய தொகை</td><td>ரூ. 1902</td></tr>
<tr><td>இரண்டாம் ஆண்டிற்கு செலுத்தப்பட வேண்டிய தொகை (GST உட்பட)</td><td>ரூ. 569468</td></tr>
<tr><td>கூடுதல்</td><td>ரூ. 571370</td></tr>
</table>
எனவே ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கான புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்ட இரண்டாம் ஆண்டு தவணைத் தொகை ரூ.5,71,370/—ஐ (GST உட்பட) யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனத்திற்கு செலுத்துவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு:</u><br>
1) ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்படவுள்ள மொத்த தொகையினை விட கூடுதலாக ஒரு நபருக்கு ரூ.284/— தொகையினை பொது நிதியிலிருந்து செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
2) இரண்டாம் ஆண்டு காப்பீட்டுத் தொகையினை காப்பீட்டு நிறுவனத்திற்கு செலுத்துவதற்கு அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.11660/2018/பி2)
</td><td></td></tr>
<tr><td>30.11.2020</td><td>329.</td><td>
அரசாணை எண்.G.O.Ms.No.240 Finance (Salaries) Department dated 02.08.2019—ன்படி இம்மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள்/பணியாளர்களுக்கு பண்டிகை முன்பணம் ரூ.5000/—த்திலிருந்து ரூ.10000/—ஆக உயர்த்தி 2019ம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் அரசாணை எண்.241 நாள் 02.08.2019—ன்படி ஓய்வூதியதாரர்களுக்கு பண்டிகை முன்பணம் ரூ.2000/—லிருந்து ரூ.4000/— ஆக உயர்த்தி உத்திரவிடப்பட்டு 2019—ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது.<br>
இம்மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள்/பணியாளர்கள் சுமார் 600 நபர்களுக்கு 10000/— வீதம் (600X10000=60,00,000) ரூ.60,00,000/— மற்றும் இம்மாநகராட்சியில் ஓய்வூதியதாரர்கள் 112 நபர்கள் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். மேற்படி 112 நபர்களுக்கு தீபாவளி பண்டிகை முன்பணம் ஒரு நபருக்கு ரூ.4000/— வீதம் (112X4000=4,48,000) ரூ.4,48,000/— தேவைப்படுகிறது. எனவே மேற்படி
</td><td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>பணியாளர்கள்/அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு தீபாவளி பண்டிகை முன்பணம் தொகை ரூ.64,48,000/–ஐ (ரூபாய் அறுபத்துநான்கு இலட்சத்து நாற்பத்து எட்டாயிரம்) வழங்குவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) பணியாளர்கள் / அலுவலர்களுக்கு 2020ம் ஆண்டு தீபாவளி முன்பணமாக நபருக்கு ரூ.10000/– மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு 2020ஆம் ஆண்டு தீபாவளி பண்டிகை முன்பணமாக ஒரு நபருக்கு ரூ.4000/– வழங்கலாம்.<br>2) மேற்படி முன்பணத் தொகையினை பணியாளர்கள்/அலுவலர்கள் ஊதியத்தில் மாதம் ரூ.1000/– வீதமும் 10 மாதங்களும், ஓய்வூதியதாரர்களின் ஓய்வூதியத்திலிருந்து மாதம் ரூ.400/– வீதம் 10 மாதங்களும் பிடித்தம் செய்யலாம். (ந.க.எண்.11660/2018/பி2)</td>
<td></td>
</tr>
<tr>
<td>30.11.2020</td>
<td>330.</td>
<td>இம்மாநகராட்சி 2019–2020ம் நிதியாண்டிற்கான நிர்வாக அறிக்கை அச்சிட்டு வழங்கிட விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்ட நிறுவனங்கள் விலைப்புள்ளிகள் அளித்துள்ளன.
<table>
<tr><th></th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>எண்ணிக்கை</th><th>தொகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>MI Manickam India, 9, Appasamy Vandayar Nagar, Thanjavur-09</td><td>60 Nos Books</td><td>22,250/-</td></tr>
<tr><td>2.</td><td>Saravana Printers, Venkatesa Perumal Koivl St., Thanjavur</td><td>60 Nos Books</td><td>21,750/-</td></tr>
<tr><td>3.</td><td>Manickam Printers, 999, South East Rampart, Thanjavur-01</td><td>60 Nos Books</td><td>21,000/-</td></tr>
</table>
மேற்கண்ட குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள Manickam Printers நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கியதை ஏற்று தொகை வழங்கிட முன் அனுமதி வழங்கலாம்.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.4530/2020/சி2)</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>30.11.2020</td>
<td>331.</td>
<td>தஞ்சாவூர் மாநகராட்சி கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வரும் சத்துணவு மையங்களில் காலியாக உள்ள சத்துணவு அமைப்பாளர், சமையலர் மற்றும் சமையல் உதவியாளர் பணியிடங்கள் நிரப்புவதற்கு வரப்பெற்றுள்ள விண்ணப்பங்களை பராமரிக்கவும் பாதுகாக்கவும் ஏதுவாக மூடுதாள்கள் 900 எண்ணிக்கை அச்சடித்து பெறுவதற்கு கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன
<table>
<tr><td>1.</td><td>குமார் ஆப்–செட் நிறுவனம்</td><td>900 எண்ணிக்கை</td><td>ரூ.2500/–</td></tr>
<tr><td>2.</td><td>சுபாஷினி கம்யூட்டர் பிரிண்டர்ஸ்</td><td>900 எண்ணிக்கை</td><td>ரூ.2800/–</td></tr>
<tr><td>3.</td><td>ஸ்ரீ அபிராமி ஆப்–செட்</td><td>900 எண்ணிக்கை</td><td>ரூ.3200/–</td></tr>
</table>
மேற்குறிப்பிட்டுள்ள விலைப்புள்ளிகளில் வ.எண்.1ல் குறிப்பிட்டுள்ள குமார் ஆப்செட் நிறுவனத்தினரிடமிருந்து வரப்பெற்றுள்ள குறைவான விலைப்புள்ளித் தொகை ரூ.2,500/–ஐ ஏற்கவும், மேற்படி செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து வழங்கிவிட்டு, சத்துணவு நிதியிலிருந்து பெற்று கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.</td>
<td>அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது</td>
</tr>
</table>

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1) 900 எண்ணிக்கையிலான மூடுதாள்களை அச்சடிப்பதற்கு வரப்பெற்றுள்ள குமார் ஆப்செட் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.
2) மேற்படி செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து வழங்கிவிட்டு சத்துணவு நிதியிலிருந்து பெற்று கொள்ளலாம். (ந.க.எண்.8783/2020/சி8)

**30.11.2020** **332.** தஞ்சாவூர் மாநகராட்சியின் அலுவலகம் புதிய அலுவலக கட்டிடத்தில் செயல்பட துவங்கியதை முன்னிட்டு பழைய பொது வைப்பறையில் பராமரிக்கப்பட்டு வந்த நிரந்த முடிவு கோப்புகளின் கீழ்க்கண்ட கோப்புகளை தமிழ்நாடு அரசு ஆவண காப்பகத்துறை, மாவட்ட ஆவண காப்பகத்திற்கு தொடர்ந்து பராமரிக்க ஒப்படைக்கப்பட்ட விவரம் மாமன்றத்தின் பதிவிற்கு, தகவலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | முடிவின் தன்மை | கோப்பு எண். | தேதி | பொருள் |
|---|---|---|---|---|
| 1 | நி.மு | 32098/64 | 16.2.1966 | தெரு பெயர் மாற்றம் |
| 2 | நி.மு | 34307/64 | 23.6.1967 | Lease Land |
| 3 | நி.மு | 41740/64 | 18.5.1965 | Sub-Division TS No.2270 |
| 4 | நி.மு | 1055/64 | 4.10.1968 | Sub-Division TS No.333& 335 |
| 5 | நி.மு | 23564/64 | 22.4.1967 | Garden Imporvement |
| 6 | நி.மு | 35629/64 | 6.2.1965 | Notification |
| 7 | நி.மு | 2458/64 | 24.2.1964 | Sub-Division TS No.72 & 94 |
| 8 | நி.மு | 23510/64 | 6.4.1965 | Town Planning Plan |
| 9 | நி.மு | 9721/64 | 8.2.1965 | Sub-Division TS.No.2184 |
| 10 | நி.மு | 12762/65 | 31.3.1968 | Immovable Property Reg file |
| 11 | நி.மு | 15208/65 | 16.1.1968 | Land transfer |
| 12 | நி.மு | 3645/65 | 23.4.1965 | Survey |
| 13 | நி.மு | 32869/65 | 19.12.1967 | Estimate file |
| 14 | நி.மு | 19466/65 | 24.6.1967 | Layout File |
| 15 | நி.மு | 5629/65 | 28.4.1965 | Tools and Plants |
| 16 | நி.மு | 22766/65 | 20.1.1966 | Sub-division TS No.279 |
| 17 | நி.மு | 12551/65 | 18.11.1965 | Roading Room |
| 18 | நி.மு | 32800/65 | 28.11.1967 | Survey |
| 19 | நி.மு | 33761/65 | 5.6.1967 | Town Planning |
| 20 | நி.மு | 1285/50 | 31.1.1950 | Sub -division file |
| 21 | நி.மு | 1891/50 | 8.2.1950 | Lease file |
| 22 | நி.மு | 2140/50 | 13.4.1950 | Lease file |

பதிவு செய்யப்பட்டது

| | | | | |
|---|---|---|---|---|
| 23 | நி.மு | 2613/50 | 24.2.1950 | Lease file |
| 24 | நி.மு | 4639/50 | 4.12.1950 | Lease file |
| 25 | நி.மு | 6925/50 - I | 30.11953 | Renewel Bus Stand |
| 26 | நி.மு | 11663/50 | 12.2.1951 | Survey |
| 27 | நி.மு | 12406/50 | 3.8.1954 | Sub -division 31/2 |
| 28 | நி.மு | 13271/50 | 25.8.1950 | council |
| 29 | நி.மு | 14078/50 | 19.11.1950 | Survey True Copy |
| 30 | நி.மு | 19702/50 | 18.1.1951 | Death Certificate |
| 31 | நி.மு | 20496/50 | 31.12.1950 | Survey |
| 32 | நி.மு | 12704/51 | 14.8.1951 | Sub-division |
| 33 | நி.மு | 16814/51 | 26.2.1952 | Survey |
| 34 | நி.மு | 16665/51 | 23.10.1952 | Survey |
| 35 | நி.மு | 15207/51 | 17.12.1951 | Survey |
| 36 | நி.மு | 13233/51 | 17.12.1951 | Survey |
| 37 | நி.மு | 13157/51 | 17.12.1951 | Survey |
| 38 | நி.மு | 13156/51 | 17.12.1951 | Survey |
| 39 | நி.மு | 12706/51 | 14.8.1951 | Survey |
| 40 | நி.மு | 11587/51 | 17.12.1951 | Survey |
| 41 | நி.மு | 12120/51 | 29.1.1951 | Survey |
| 42 | நி.மு | 11588/51 | 21.1.1952 | Survey |
| 43 | நி.மு | 19195/51 | 30.6.1952 | Plan file |
| 44 | நி.மு | 9355/51 | 12.6.1951 | Survey |
| 45 | நி.மு | 9727/51 | 4.11.1951 | Survey |
| 46 | நி.மு | 9078/51 | 4.11.1951 | Survey |
| 47 | நி.மு | 8331/51 | 23.5.1951 | Survey |
| 48 | நி.மு | 8136/51 | 17.12.1951 | Survey |
| 49 | நி.மு | 5494/51 | 8.5.1951 | Lease |
| 50 | நி.மு | 1841/51 | 4.11.1951 | Survey |
| 51 | நி.மு | 869/51 | 10.3.1951 | Survey |
| 52 | நி.மு | 867/51 | 10.3.1951 | Survey |

<u>அலுவலக குறிப்பு</u>

மாமன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.6088 /2020/டி1)

30.11.2020

**333.** இம்மாநகராட்சி பதிவறையில் உள்ள பழைய கோப்புகள் அழிப்பதற்கு நகராட்சி நடைமுறை நூல் (Municipal Manual) தொகுதி II பக்கம் 231 முதல் 275–யின்படி ஒமு/மூ.மு/தொமு மற்றும் முடிக்கப்பட்ட பழைய கோப்புகளையும் மற்றும் Tamil Nadu Municipal Manual Volume-I Sl.No.37 Disposal of obsolute Electoral Rolls மற்றும் The Conduct of Election Rules 1961 Section 94-Disposal of Election Papers ஆகியவற்றில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, இம்மாநகராட்சியில் கடந்த 2011ஆம் ஆண்டு நடந்து முடிந்த உள்ளாட்சி தேர்தல்–2011 தொடர்பான வாக்காளர் பட்டியல் மற்றும் இதர ஆவணங்களை கிழித்து, அழித்து எடைக்கு எடுத்துக்கொள்ளும் பணிக்கு அரசு அங்கீகாரம் பெற்ற பழைய பேப்பர் ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு 28.10.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றதின் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொகை (கிலோ ஒன்றுக்கு ) |
|---|---|---|
| 1. | திரு E.தங்கராஜன், 44, கோட்டாரி நகர், சிங்காநல்லூர், கோயம்புத்தூர் | ரூ. 7.60 (ஏழு ரூபாய் அறுபது பைசா) |
| 2. | திரு E.மோகன், 455ஏ/200, அண்ணா சாலை, தஞ்சாவூர் | ரூ. 7.10 (ஏழு ரூபாய் பத்து பைசா) |
| 3. | திரு கணேசா, வேஸ்ட் Paper, 30, TSM School, திருச்சி–8 | ரூ. 6.90 (ஆறு ரூபாய் தொன்னூறு பைசா) |

மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.1ல் கண்ட திரு E.தங்கராஜன் என்பவர் உயர்ந்தபட்சமாக ஒரு கிலோவுக்கு ரூ.7.60–க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளதை ஏற்று வேலை உத்தரவு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1) கூடுதலாக பொது ஒப்பந்தப்புள்ளி கோரிய திரு E.தங்கராஜன், 44, கோட்டாரி நகர், சிங்காநல்லூர், கோயமுத்தூர் என்பவரது ஒரு கிலோவுக்கு கூடுதலாக ரூ.7.60–க்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையை அங்கீகரிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற முன் அனுமதியுடன், மேற்கண்ட நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கியதற்கும், நாளிதழில் விளம்பரம் கட்டணத்திற்கும் ரூ.6636/–க்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.6202/2010/டி1)

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

| | | | |
|---|---|---|---|
| 30.11.2020 | 334. | தஞ்சாவூர் மாநகராட்சி பொது சுகாதார பிரிவில் 1 முதல் 14 துப்புரவு கோட்டங்களின் பயன்பாட்டில் இல்லாத கழிவு நீக்கம் செய்யும் நிலையில் உள்ள காம்பாக்டர் பின், டம்பர் பிளேசர் பின், சைக்கிள் ரிக்ஷா மற்றும் தள்ளு வண்டிகள் கீழ்கண்டுள்ள எண்ணிக்கையில் கீழவாசல் அண்ணா திருமண மண்டபம் வளாகத்தில் சேர்க்கப்பட்டுள்ளது என 06.10.2020ம் தேதிய துப்புரவு ஆய்வாளர் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, மேற்படி பயன்பாட்டில் இல்லாத கழிவு நீக்கம் செய்யும் வாகனங்களை பொது ஏலம் விடுவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**பொருட்களின் விபரம் :**<br>1 – காம்பாக்டர் பின் – 76<br>2 – டம்பர் பிளேசர் பின் – 02<br>3 – தள்ளுவண்டி – 09<br>4 – சைக்கிள் ரிக்ஷா – 07<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட பொருட்களை கருவிகள் மற்றும் தளவாடங்கள் பதிவேட்டிலிருந்து நீக்கம் செய்யவும் மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.12935/2018/எம்சிஇ1) | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 30.11.2020 | 335. | இம்மாநகராட்சியில் செயல்பட்டு வரும் 4 எண்ணிக்கையிலான கணினி வரி வசூல் மையங்கள், 4 எண்ணிக்கையிலான பிறப்பு இறப்பு சான்று வழங்கும் மையங்கள் மற்றும் அனைத்து பிரிவுகளிலும் பயன்படுத்தப்பட்டு வரும் கணினிகள் மற்றும் பிரிண்டர்கள் (கணினிகள்–50 எண்ணிக்கை, All in one Computer-7 Nos, கணினி கிராபிக்ஸ் உடன் கூடியது–1 எண்ணிக்கை லேப்டாப்–8 எண்ணிக்கை, லேசர் ஜெட் பிரிண்டர்–30 எண்ணிக்கை, All in one Printer-6 எண்ணிக்கை, Dot Matrix Printer-11 எண்ணிக்கை, Scanner-5, CRT Monitor 10 எண்ணிக்கை) ஆகியவற்றினை ஆண்டு பராமரிப்பு பணியில் (AMC) ஈடுபட்டு வரும் M/s. Cashew Systems நிறுவனத்தின் ஒப்பந்த காலம் 31.03.2020 உடன் முடிவடைந்துள்ளது. மேலும் உதவி திட்ட கணினி அமைப்பாளர் அவர்களின் 22.07.2020ம் தேதிய குறிப்பின்படி ஒரு வருட காலத்திற்கு கணினிகள் மற்றும் பிரிண்டர்கள் பராமரிப்பு பணி மற்றும் 10 எண்ணிக்கையிலான முற்றிலும் பழுதடைந்த CRT Monitorகளுக்கு பதில் புதிய LED Monitorகளை வாங்கி பொருத்தும் பணிக்காக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.10,00,000/–ஐ (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி நாள் 30.09.2020 வழங்கப்பட்டு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பணிக்கு 16.10.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு 2 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை பரிசீலனை செய்து முடிவு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரரின் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th><th>சதவீதம்</th></tr>
<tr><td>1.</td><td>திருமதி G.ஜீவா, தஞ்சாவூர்</td><td>8,35,700.00</td><td>மதிப்பீட்டு தொகையை விட (–) 0.19% குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திரு S.கோபி, தஞ்சாவூர்</td><td>8,48,400.00</td><td>மதிப்பீட்டு தொகையை விட (+) 1.33% அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு:</u><br>
1) மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள மதிப்பீட்டு தொகையை விட (–) 0.19% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருமதி G.ஜீவா, தஞ்சாவூர் ஒப்பந்ததாரர் அவர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.<br>
2) பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு வேலை உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1709/2020/எம்சிஇ1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>30.11.2020</td>
<td>336.</td>
<td>தஞ்சாவூர் தென்கீழ் அலங்கம் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளியில் உள்ள சமையலறை கட்டிடங்கள் மிகுந்த சேதமடைந்த நிலையில் உள்ளதாகவும், அதனை மாற்றி ஒரு புதிய சமையல் அறை கட்டிடம் மற்றும் பொருட்கள் வைப்பறை (Stock Room) கட்டிடம் கட்டித்தருமாறும் மேலும் பள்ளி வளாகத்தின் தரைத்தளங்களில் சில பகுதிகள் மண் தரைகளாக உள்ளதால் மழைக்காலங்களில் அப்பகுதிகளில் சேறும் சகதியுமாக மாறி புற்கள், செடி மற்றும் கொடிகள் முளைத்து விஷப்பூச்சிகள் வாழ்விடங்களாக மாறி வருவதாகவும், அதனால் மாணவர்களுக்கு பாதுகாப்பான இடமாக இல்லாமல் உள்ளது எனவும், அதனை சீர் செய்து புதிய தரைத்தளம் அமைத்து தருமாறும் மேற்படி பள்ளி தலைமையாசிரியர் தனது 18.08.2020ஆம் தேதிய கடிதத்தில் கேட்டுகொண்டுள்ளார்.<br>
மாநகராட்சியின் பராமரிப்பில் உள்ள பள்ளியில் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை செய்து தரவேண்டியதன் அவசர அவசியத்தினை கருதியும், மாணவ/மாணவியரின் நலன் கருதியும், மேற்படி பள்ளி தலைமையாசிரியர் அவர்களின் வேண்டுதலுக்கிணங்கவும், தஞ்சாவூர் தென்கீழ் அலங்கம் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளியில் புதிதாக சமையலறை கட்டிடம் மற்றும் தரைத்தளம் அமைத்து தரும் பணியினை மேற்கொள்வதற்காக தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.7.50/– இலட்சத்தை (ரூபாய் ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) கல்வி நிதியில் இருந்து செலவிடவும், மேலும் பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் அங்கீகரிக்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | <u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) இப்பணிக்கு உத்தேச செலவினம் ரூ.7.50/— இலட்சத்தை (ரூபாய் ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) 2020—2021 திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து கல்வி நிதியிலிருந்து செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) இப்பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>3) தஞ்சாவூர், தென்கீழ் அலங்கம் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியரின் 18.08.2020ஆம் தேதிய கடிதம் மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண்.7693/2020/எம்சிஇ4) | |
| 30.11.2020 | 337. | தஞ்சாவூர் தென்கீழ் அலங்கம் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி வளாகத்தின் முற்புறத்தில் உள்ள திறந்த வெளிப்பகுதியில் தினந்தோறும் மாணவ/மாணவியர்களுக்கு வழிப்பாட்டு கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது எனவும், ஏதேனும் விழாக்கள் நடத்துவதென்றாலும் திறந்த வெளியில்தான் நடத்தப்பட்டு வருகிறது என்றும், எனவே மேற்படி திறந்த வெளிப்பகுதியில் மேற்கூறை அமைத்து தருமாறு மேற்படி பள்ளி தலைமையாசிரியர் தனது 18.08.2020ஆம் தேதிய கடிதத்தில் கேட்டுகொண்டுள்ளார்.<br>மாநகராட்சியின் பராமரிப்பில் உள்ள பள்ளியில் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை செய்து தரவேண்டியதன் அவசர அவசியத்தினை கருதியும், மாணவ/மாணவியரின் நலன் கருதியும், மேற்படி பள்ளி தலைமையாசிரியர் அவர்களின் வேண்டுதலுக்கிணங்கவும், தஞ்சாவூர் தென்கீழ் அலங்கம் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி முன்புற வளாகத்தில் Galvalumeனால் ஆன Sheet—ல் மேற்கூறை அமைத்து தரும் பணியினை மேற்கொள்வதற்காக தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.5.00/— இலட்சத்தை (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) கல்வி நிதியில் இருந்து செலவிடவும், மேலும் பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் அங்கீகரிக்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) இப்பணிக்கு உத்தேச செலவினம் ரூ.5.00/— இலட்சத்திற்கு (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) 2020—2021 திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து கல்வி நிதியிலிருந்து செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம். | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

2) இப்பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

3) தஞ்சாவூர், தென்கீழ் அலங்கம் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியரின் 18.08.2020ஆம் தேதிய கடிதம் மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.7694/2020/எம்சிஇ4)

---

**30.11.2020**

**338.** தஞ்சாவூர் மாநகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்திற்கு ‘‘ஏ’’ வகுப்பு அங்கீகாரத்தினை புதுப்பித்திடுவதற்காக போக்குவரத்து வாகன ஆய்வாளர் அவர்களால் புதிய பேருந்து நிலையத்தில் ஆய்வு செய்யப்பட்டு, ஆண் மற்றும் பெண்களுக்கு என தனியாக பயணிகள் காத்திருப்பு அறை கிரில் வைத்து அமைத்து தர வேண்டுமென தஞ்சாவூர் வட்டார போக்குவரத்து அதிகாரி மற்றும் மாவட்ட ஆட்சிதலைவர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.5828/அ2/2017, நாள் 18.05.2020–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இம்மாநகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் பயணிகள் காத்திருப்பு அறை கிரில் வசதியுடன் அமைத்து தரும் பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.4,35,000/–க்கு (ரூபாய் நான்கு இலட்சத்து முப்பத்தைந்தாயிரம் மட்டும்) ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி நாள் 26.09.2020ல் பெறப்பட்டு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டுள்ளது. இப்பணிக்கு 16.10.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு 2 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை பரிசீலனை செய்து முடிவு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | சதவீதம் |
|---|---|---|---|
| 1. | திரு எஸ்.ரமேஷ், தஞ்சாவூர் | **3,80,780.00** | மதிப்பீட்டு தொகையை விட (–) **0.20**% குறைவு |
| 2. | திரு எஸ்.கோபி, தஞ்சாவூர் | **3,87,890.00** | மதிப்பீட்டு தொகையை விட (+) **1.66**% அதிகம் |

அலுவலகக்குறிப்பு:

1) மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள மதிப்பீட்டு தொகையை விட (–) 0.20% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு எஸ்.ரமேஷ், தஞ்சாவூர் அவர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.

2) பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு வேலை உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.8846/2020/எம்சிஇ4)

அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது

| | | |
|---|---|---|
| 30.11.2020 | **339.** இம்மாநகராட்சிக்கு சொந்தமான ஜெபமாலைபுரத்தில் உள்ள உரக்கிடங்கில் குடிநீர் பகுப்பாய்வு செய்யப்பட்டது. மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம், தஞ்சாவூர் அவர்களது Lr.No.F.SWM-01/RS/DEE/TNPCB/TNJ/ROA/2020, நாள் 05.10.2020ன்படி குடிநீர் பகுப்பாய்வு கட்டணம் ரூ.9,930/—ஐ செலுத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகை ரூ.9,930/—ஐ (ரூபாய் ஒன்பதாயிரத்தி தொள்ளாயிரத்தி முப்பது மட்டும்) மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம், தஞ்சாவூர் அவர்களுக்கு வரைவோலையாக செலுத்திட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1) மேற்கண்ட தொகை ரூ.9,930/—ஐ (ரூபாய் ஒன்பதாயிரத்தி தொள்ளாயிரத்தி முப்பது மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட செலவினை 2020—2021 வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) மேற்கண்ட தொகைக்கு மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி, மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திற்கு மேற்படி தொகை செலுத்தப்பட்டதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>4) மாசுக்கட்டுப்பாடு வாரியத்தின் Lr.No.F.SWM-01/RS/DEE/TNPCB/TNJ/ROA/2020, நாள் 05.10.2020 மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.4556/2020/எம்சிஇ5) | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 30.11.2020 | **340.** தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.38 ரெத்தினா காலனி விரிவாக்க பகுதியில் 4 புதிய மின் கம்பங்கள் மற்றும் மின் தடம் அமைக்கும் தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் கடிதம் க.எண்.உ.மி.பொ/இ.பரா/நீலகிரி.கோ:Demant/அ.எண்.151, நாள் 28.10.2020ன்படி கேட்பு பட்டியலாக ரூ.10,699/— வரப்பெற்றுள்ளது. மேலும் வார்டு எண்.38 ARS நகரில் 3 புதிய மின் கம்பம், 3 மின் கம்பங்களுக்கு மின் தடம் அமைக்கும் பணிக்கு தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் கடிதம் க.எண்.உ.மி.பொ/இ.பரா/நீலகிரி.கோ:Demant/ அ.எண்.152, நாள் 28.10.2020ன்படி கேட்பு பட்டியலாக ரூ.28,350/— வரபெற்றுள்ளது. எனவே இரண்டு பணிகளுக்கும் சேர்த்து ஆக மொத்தம் கூடுதல் தொகை ரூ.39,049/—ஐ (ரூபாய் முப்பத்தொன்பதாயிரத்தி நாற்பத்தி ஒன்பது மட்டும்) தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு செலுத்திட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | <u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) இப்பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு தொகை செலுத்தப்பட்டதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>3) தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக கடிதம் உ.பொ, இயக்குதலும் பேணுதலும், நீலகிரி, தஞ்சாவூர் கடிதம் க.எண்.உ.மி.பொ/இ.பரா/நீலகிரி.கோ: Demant/அ.எண்.151 மற்றும் 152, நாள் 28.10.2020 மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.7308/2020/எம்சிஇ6) | |
| 30.11.2020 | 341. | தஞ்சாவூர் மாநகராட்சி பொது சுகாதார பிரிவில் பணிபுரியும் அனைத்து கோட்ட 174 ஆண் துப்புரவு பணியாளர்களுக்கு அரசாணை (நிலை) எண்.168 ந.நி. மற்றும் கு.வ. (பேரூ–1) துறை நாள் 16.11.2015ன்படி (அரைக்கை சட்டை மற்றும் முழுக்கால் சட்டை (Full Pant) மற்றும் தலைப்பாகை துணி நீல கலர்–2 செட்) மற்றும் 167 பெண் துப்புரவு பணியாளர்களுக்கும் ஆக கூடுதல் 341 துப்புரவு பணியாளர்களுக்கும் 2020–21ம் ஆண்டிற்கு சீருடைகள் வாங்கி வழங்கிடவும் அதற்கான தையல் கூலி உட்பட ஆகும் உத்தேச செலவினம் ரூ.10,00,000/–க்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2) ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வழங்கல் உத்திரவு வழங்கிய இவ்வலுவலக நடவடிக்கையினை மாமன்றம் ஏற்கலாம்.<br>(ந.க.எண்.9571/2020/எச்4) | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 30.11.2020 | 342. | இம்மாநகராட்சியில் பணிபுரிந்து 21.11.2009ல் பணியிடை காலமான திருமதி பி.உஷாதேவி என்பவரின் மகன் திரு மு.பிரேம்கண்ணா என்பவர் தமக்கு கருணை அடிப்படையில் பணி வழங்க கோரி சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண். W.P.No.(MD) 13294 of 2020 மேற்படி வழக்கு தொடர்பான தீர்ப்பு நகல் 01.10.2020ல் வரப்பெற்றுள்ளதாக தெரிவித்து, திரு திலீப்குமார், அரசு வழக்கறிஞர் இம்மாநகராட்சி சார்பாக ஆஜராகி மேற்படி வழக்கில் ஆஜரானதற்கான வழக்காடு கட்டணமாக 12,000/– வழங்க தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் மேற்படி தொகையை வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.8804/2020/எச்5) | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| 30.11.2020 | 343. | நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.3336/ஜெ2/2020–9 நாள் 24.04.2020–ன் அறிவுரையின்படி COVID-19 தடுப்பு பணி தொடர்பாக 200 லிட்டர் Hand Sanitaser Savon Care கோயமுத்தூர் நிறுவனத்திடமிருந்து வாங்கி வழங்கிடவும் மேற்படி பணிக்காக உத்தேச செலவினம் ரூ.70,000/–க்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1) மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி பணி பொது மக்கள் நலன் கருதி போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருவதால், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கைபடி, நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களது முன் ஒப்புதல் பெற்று வழங்கல் உத்திரவு வழங்கிய இவ்வலுவலக நடவடிக்கையினை மாமன்றம் ஏற்கலாம்.<br>(ந.க.எண்.3996/2020/எச்8) | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 30.11.2020 | 344. | தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட 51 வார்டுகளில் டெங்கு நோய் தடுப்பு பணி மேற்கொள்ள டெங்கு நோய் கொசு புழு அழிக்கும் பணி மற்றும் அது தொடர்பாக பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணி மேற்கொள்ள நாள் ஒன்றுக்கு 210 களப்பணியாளர்களை ஈடுபடுத்திட மாமன்ற தீர்மானம் எண்.275, நாள் 31.08.2020ன்படி M/s. Shanpros Consulting & Contracting (OPC) Private Limited, நாகப்பட்டினம் என்ற நிறுவனத்தின் மூலம் 14.08.2020 முதல் 59 நாட்களுக்கு உத்திரவிடப்பட்ட நிலையில் மேற்படி பணியினை வரும் மழைக்காலத்தை கருத்தில் கொண்டு மேலும் 13.10.2020 முதல் 59 நாட்களுக்கு நீட்டிப்பு செய்து உத்திரவிடவும் மேற்படி பணிக்காக உத்தேச செலவினம் ரூ.55,50,720/–க்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1) மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2) பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று வேலை உத்திரவு வழங்கிய இவ்வலுவலக நடவடிக்கையை மாமன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.6820/2020/எச்8) | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 30.11.2020 | 345. | தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட 51 வார்டுகளில் கொரோனா நோய் தடுப்பு தொடர்பாக கணக்கெடுப்பு பணிக்கு தேவையான கணக்கெடுப்பு படிவம் 20,000 எண்ணிக்கை மற்றும் CMR Specimen Referral Form 16,000 எண்ணிக்கை மற்றும் வீட்டில் தனிமைப்படுத்துதல் Sticker 3,000 குமார் ஆப்செட் நிறுனத்திடமிருந்து வாங்கி வழங்கிய வகையில் செலவினம் ரூ.46,000/–க்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | <u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மாமன்றம் மேல் நடவடிக்கைக்கு அனுமதிக்கலாம்.<br>3) பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை மேற்கொண்ட இவ்வலுவலக நடவடிக்கையை மாமன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.3996/2020/எச்8) | |
| 30.11.2020 | 346. | தஞ்சாவூர் மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட வார்டு எண்–6, பிளாக் எண்–1, நகர புல எண்கள்– 1/1,3134/1-இல் உள்ள 2.64 ஏக்கர் பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவுகளாக மாற்றம் செய்ய கோரி திருமதி பி.ஜெயலெட்சுமி மற்றும் திரு பி.குழந்தைவேல், எண்.31/4328, பழைய மாரியம்மன்கோவில் ரோடு, கீழவாசல், தஞ்சாவூர் என்பவர்கள் விண்ணப்பித்தது தொடர்பாக, உறுப்பினர் செயலர் (பொ), தஞ்சாவூர் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களின் கடிதம் ந.க.எண்.2377/2018/தஉதிகு, நாள் 31.01.2019இன் தேதிய கடிதத்தில் உத்தேச மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடத்தில் கண்டுள்ளவாறு அடிப்படை வசதிகளை நிறைவேற்றி, சாலைகள் மற்றும் பூங்காக்கள் தானபத்திரம் மூலம் ஒப்படைத்து அதன் விபரத்தினை தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.<br>மாநகராட்சி செயற்பொறியாளரின் 25.02.2020–ஆம் தேதிய குறிப்பில் மனைப்பிரிவில் தார் சாலை அமைக்கப்பட்டுள்ளதாகவும், ஏனைய அடிப்படை வசதிகளான வடிகால், பகிர்மான குழாய், மின் விளக்கு பொறுத்துதல் ஆகிய பணிகளுக்கு ரூ.26,34,000/– (ப.சீ.எண்.107/08/19–20/0009635, நாள் 14.02.2020–இல் மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது எனவும், மின் தடத்திற்கு மின் வாரிய அலுவலகத்திற்கு (ரூ.1,25,380+100) ரூ.1,25,480/– நாள் 05.12.2019–இல் செலுத்தப்பட்டுள்ளது. எனவே, மேற்படி மனைபிரிவு சாலைகள் மற்றும் பூங்காக்களை தானமாக ஏற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனை ஏற்று மனுதாரர் தயார் செய்து சமர்ப்பிக்கப்பட்ட பத்திரத்தினை நகரசார் ஆய்வரால் 10.06.2020ஆம் தேதியில் சரிபார்க்கப்பட்டு தான பத்திரத்தில் உள்ளது போல சாலைகள், பூங்காக்கள் ஆகியவை நிலையில் உள்ளது என குறிப்பு கொடுக்கப்பட்டுள்ளது.<br>மேற்படி தானபத்திரம், இணை சார்பதிவாளர் எண்.1, தஞ்சாவூர் அலுவலகத்தில் பத்திர எண்.5288/2020, நாள் 24.10.2020 பத்திரப் பதிவு செய்யப்பட்டுள்ளது. தானப்பத்திரத்தினை ஏற்றுக்கொண்டு தஞ்சாவூர் உள்ளூர் திட்டக் குழுமத்திற்கு அனுப்பி வைக்கவும், தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்ட பின்னர் மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கவும் மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது. | அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | <u>அலுவலகக்குறிப்பு:</u> தானபத்திரம் மாமன்றம் ஏற்கலாம். மேலும், தஞ்சாவூர் உள்ளூர் திட்டக் குழுமத்தால் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்ட பின்னர் மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கலாம். (ந.க.எண்.13273/2020/எம்சிஎப்1) | |

நாள் : 03.12.2020
இடம்: தஞ்சாவூர்.

ஒம்./ பு.ஜானகி இரவீந்திரன்,
ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்.

// உண்மை நகல் //

ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்.
தஞ்சாவூர் மாநகராட்சி.

பெறுநர்

1) மாவட்ட ஆட்சித்தலைவர், தஞ்சாவூர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது. (முகாம் அலுவலகம்)
2) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–600 028 அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
3) உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை, உடன் தணிக்கை பிரிவு, தஞ்சாவூர் மாநகராட்சி.

நகல் உதவி திட்ட அமைப்பாளர், தஞ்சாவூர் மாநகராட்சி (மாநகராட்சி இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய)
„ சி5–மாமன்றக்கூட்ட எழுத்தர்.
„ அலுவலக விளம்பர பலகை.